1978 மார்ச் 8] [பேரவைத் துணைத்தலைவர்]

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 39,32,56,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திரு. ரா. மார்க்கபந்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், கோரிக்கை எண். 50க்கு அவர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,94,64,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

4. அமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி.

(ஆ) அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் கோரிக்கைகளை அமைச்சரவை பரிசீலிக்க இருப்பது குறித்து பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 82-வது விதியின்கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு இப்போது முக்கிய அறிக்கை அளிப்பார்கள்.

The Hon'ble THIRU S. RAMACHANDRAN: Hon'ble Chief Minister had already informed this House that the demands of the N.G.G.Os will be discussed at the Cabinet Meeting. It is now proposed to convene the Cabinet Meeting on 10th March 1978 by 3.00 p.m. The decisions of the Cabinet will be announced by the Chief Minister at the Legislative Assembly on 11th March 1978.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—55 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.